வரையறுக்கப்பட்ட கொலதெனியா கைத்ரோபவர் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

--------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது அபிப்பிராயத்தில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

ஆ) எனது அபிப்பிராயத்தில்:

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களும் விளக்கங்களும் நான் பெற்றிருக்கின்றேன்.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், முன்னைய ஆண்டிற்கான ரூபா 66,567,899 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் ரூபா 54,757,419 வரிக்கு முன்னரான தேறிய இலாபமொன்றினை உழைத்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 11,811,480 பற்றாக்குறையொன்றினைக் சுட்டிக்காட்டுகின்றது. மின்வலு உற்பத்தியிலிருந்தான வருமானம் குறைந்தமையே இந்தப் பின்னடைவிற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கப்பெற்றதகவலின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான முன்னைய ஆண்டிற்கான சில முக்கிய விகிதங்கள் பின்வருமாறுள்ளது.

| | 2016 | 2015 |
|---|---|---|
| மொத்த இலாப விகிதம் (சதவீதம்) | 55 | 66 |
| நடைமுறை விகிதம் (தடலைகளின் எண்ணிக்கை) | 1:54 | 1:55 |

வருமானம் ரூபா 21 மில்லியனால் குறைவடைந்தமை மற்றும் விற்பனை கிரயங்கள் ரூபா 1 மில்லியனால் அதிகரித்தமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்த இலாப விகிதம் 11 சதவீதத்தால் குறைவடைந்தமைக்கு பிரதானமாக காணப்பட்டது.

### 3.2.2 பாரிய வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்குகளின் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான பாரிய வருமானம் மற்றும் செலவின விடயங்களுடனான முரண்கள் பின்வருமாறு.

| **வருமானம் / செலவினம்** | **2016** | **2015** | **முரண் {சாதகம் / (பாதகம்)}** | |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா.** | **சதவீதம்** |
| மின்வலு பொறியை வாடகைக்கமர்த்துவதிலிருந்தான வருமானம் | 75,767,005 | 97,234,183 | (21,467,178) | (22) |
| விற்பனை கிரயம் | 33,921,202 | 32,924,765 | (996,437) | (3) |
| நிர்வாகச் செலவினங்கள் | 3,893,565 | 4,279,543 | 385,978 | 9 |
| நிலையான வைப்புக்களிலிருந்தான வட்டி வருமானம் | 12,681,516 | 392,301 | 12,289,215 | 3,132 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான மழைவீழ்ச்சி குறைவடைந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 21 மில்லியனால் குறைவடைந்திருந்தது. எனினும், நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 12 மில்லியனால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

தேசிய மின்சார விநியோக அமைப்புக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக சிறிய கைற்கோ மின்பொறியை கட்டியெழுப்புதல், செயற்படுத்தல் மற்றும் முகாமைசெய்தல் என்பன கம்பனியின் பிரதான நோக்கமாக காணப்படுகின்றது. அதற்கிணங்க, மீளாய்வாண்டிற்கான மின்வலு உற்பத்தியானது 4,692.097 கிலோவாற் ஆக இருந்ததுடன் இது சாத்தியவள கற்கையின் போது உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட 4,688.086 கிலோவாற் ஆன மதிப்பிடப்பட்ட வருடாந்த மின்வலு உற்பத்தியை விட அதிகமாகவிருந்தது. கடந்த நான்கு வருடங்களின் போதான மின்வலு உற்பத்தி மற்றும் உழைக்கப்பட்ட வருமான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | மின்வலு உற்பத்தி | வருமானம் |
|---|---|---|
| | கிலோவாற் | ரூபா.மில்லயன் |
| 2016 | 4,692.097 | 75.76 |
| 2015 | 6,080.927 | 97.23 |
| 2014 | 5,753.413 | 91.54 |
| 2013 | 5,188.016 | 82.12 |

மீளாய்வாண்டில் மழை வீழ்ச்சியின் குறைவு காரணமாக மீளாய்வாண்டிற்கான மின்வலு உற்பத்தியானது 1,388.830 கிலோவாற் இனால் பற்றாக்குறையாகவிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 சமூக பொறுப்புக்கள்

கொலதெனியா கிராமத்தவர்களாலும் மற்றும் இலங்கை மகாவலி அதிகாரசபையின் செயற்திட்ட அங்கீகரிப்பு முகவராலும் இணங்கப்பட்டவாறு மீளாய்வாண்டில் கம்பனியால் பின்வரும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) புதிய கீழ்ப் பாலத்தை நிர்மாணிப்பதற்கு அல்லது நதியின் குறுக்கே மேலாக மேற்பகுதியில் 400 மீற்றர் அளவில் அமைந்துள்ள தற்போதுள்ள கீழ்ப் பாலத்தை அகலமாக்குதல் (பாதீடு ஏற்பாடு ரூபா 4.5 மில்லியனாகவிருந்தது).

*மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் உரிமையாளர்களாக மற்றும் நிர்வாகியாக அம்பேஹம பிரதேச சபை இருந்தமையால் உரிய அரச நிறுவனங்களிடமிருந்து அனுமதிகளை பெறுவதற்கு கம்பனிகளால் இயலாதிருந்தது என கம்பனியின் தலைவர் இது தொடர்பான பதிலில் குறிப்பிட்டிருந்தார்.*

(ii) கிரயத்திலுள்ள உள்ளக வீதிகளிற்கு கொங்கிறீட் போடல் (பாதீட்டு ஏற்பாடு ரூபா 3 மில்லியனாகவிருந்தது)

*கிராமிய வீதியின் சாத்தியமான நீளத்திற்கு கொங்கிறீட் போடுவதற்கு இந்த தொகையை பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் அறிவுரை செய்தது என இது தொடர்பில் கம்பனியின் தலைவர் அறிவித்திருந்தார். கிராமத்தின் உள்ளக வீதி வலையமைப்பிற்கு கொங்கிறீட் போடுவதனை பூர்த்தி செய்வதற்கு 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் ரூபா 5 மில்லியன் மேலதிக ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது.*

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 இன் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையால் வேண்டப்பட்டவாறு கூட்டிணைந்த திட்டமானது கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.